**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.61/2025**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 28.07.2025**

| | |
|---|---|
| **Name : செந்தில்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கருங்கல்லில் குடியிருந்து தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். கடந்த 07.10.2024ம் தேதி மதியம் 2.30 மணிக்கு மேல் சம்பவயிடமான குஞ்சாண்டியூர் பர்வந்தெருவில் உள்ள சம்புவள்ளி என்பவரின் வீட்டு முன்பாக கருமலைக்கூடல் போலீசார் சம்பவத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் சங்கர் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். மகஜரிலுள்ள விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரிலுள்ள 2வது கையொப்பம் **அ.சா.ஆ– 3** ஆகும்.கடந்த 07.10.2024ம் தேதி மதியம் 3.30 மணிக்கு பர்வந்தெருவில் உள்ள சம்புவள்ளி வீட்டு முன்பாக 80 செ.மீ நீளமுள்ள கட்டை ஒன்றை கருமலைக்கூடல் போலீசார் நான் மற்றும் சங்கர் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அது பற்றிய விவரம் எனக்கு தெரியும். திறந்த நீதிமன்றத்திலுள்ள கட்டை எடுக்கப்பட்டதாக சாட்சி அடையாளம் காட்டினார். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் **அ.சா.ஆ–4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் JSWகம்பெனியில் ஒப்பந்ததாரராக வேலை செய்கிறேன். காலை 6 மணிக்கு பணிக்கு சென்றுவிட்டு மாலை 7 மணிக்கு வீடு திரும்புவேன். சம்புவள்ளி, பிரபு ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. சம்பவயிடத்திலிருந்து எத்தனை கிலோமீட்டரில் என் வீடு உள்ளது என்றால் 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

3) இந்த வழக்கில் சாட்சியாக போடப்பட்டுள்ள மற்ற நபர்களை தெரியாது. பர்வந்தெருவில் எனக்கு உறவினர் கிடையாது என்றால் ஆமாம். 07.10.2024ம் தேதி எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் 2.15 மணிக்கு என் இரு சக்கர வாகனத்தில் வந்தேன். அன்று பழங்கோட்டை செல்வதற்காக பர்வந்தெரு வழியாக சென்றேன். நான் சென்ற போது பர்வந் தெருவில் கூட்டமாக இருந்தார்கள்.அவர்கள் விவரம் எனக்கு தெரியாது.

4) நான் அங்கு நின்று என்னவென்று பார்த்தேன். சண்டை நடந்ததற்காக கையொப்பம் செய்யுமாறு உதவி ஆய்வாளர் என்னிடம் கேட்டார். எவ்வளவு நேரம் அங்கிருந்தேன் என்றால் ½ மணி நேரம் இருந்தேன். என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எத்தனை தாள்களில் கையொப்பம் செய்தேன் என்று ஞாபகம் இல்லை. 4, 5 கையொப்பம் செய்திருப்பேன். பழங்கோட்டையில் நான் பார்க்க சென்ற நபர் குமார் ஆவார். சம்பவயிடத்தை என்னிடம் யாரும் அடையாளம் காட்டவில்லை என்றால் ஆமாம்.

5) போலீசார் அழைத்ததாக நான் அங்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் காவல் நிலையத்தில் கைபொய்யப்பம் செய்தேன் என்றும் அ.சா.2 பிரபு என் நண்பர் என்றும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை. ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.61/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 28.07.2025**

| | |
|---|---|
| **Name : அருண்நடேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.09.2024ம் தேதியன்று காலை 08.15 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திருமதி.சம்புவள்ளி வயது 65, க/பெ மகாலிங்கம் என்பவர் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக சிசிச்சைக்காக வந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 30.09.2024 –ம் தேதி காலை 07.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு பெண்கள் தன்னை கையால் அடித்ததாக என்னிடம் கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வெளிப்புற காயம் ஏதும் இல்லை, கை, கால் வலி இருப்பதாக தெரிவித்தார். அந்த வலி உள்ள பகுதியை நுண்கதிர் படம் எடுத்து பார்த்த போது இடது கை நடுவிரலில் proximal interphalangeal joint subluxation மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

3) மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ.5.** விபத்து

பதிவேட்டில் உள்ள காயச் சான்றிதழ் **அ.சா.ஆ.6** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) காயம் பட்ட நபரை நான் தான் பரிசோதித்தேன் என்றால் ஆமாம். நான் பரிசோதனை செய்த போது எந்த ஒரு வெளிப்புற காயமும் இல்லை என்றால் ஆமாம். விரலில், கைகளில் வீக்கம் இல்லை என்றால் ஆமாம். காயம்பட்ட நபர் ஆயுதத்தால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். கையால் தாக்கியதாக குறிப்பிட்டார் என்றால் ஆமாம்.

5) பொதுவாக விரலின் உட்பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தால் எவ்வளவு நேரத்தில் வீக்கம் ஏற்படும் என்றால் 1 முதல் 7 மணி நேரத்தில் வீக்கம் ஏற்படும். இந்த வழக்கில் எலும்பு முறிவு எதுவும் இல்லை வீக்கம் ஏதும் இல்லை. நான் சொல்வது போல் விரல்களின் எலும்பு நகர்ந்திருந்தால் வீக்கம் ஏற்படும் என்றால் சரிதான்.

6) காயம் பட்ட சம்புவள்ளிக்கு மேல் சிகிச்சை செய்த நுண்கதிர் படத்தை எடுத்த தேதி மற்றும் அதன் எண் காயச் சான்றிதழில் இல்லை என்றால் ஆமாம். வலி இருப்பதாக காயம் ஏற்படாமலும் சொல்ல முடியும் என்றால் ஆமாம். விபத்து பதிவேட்டின் அறிக்கையின் படி கையில் அடித்ததால் நகர்வு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. நான் சொல்வது போல் கையால் அடித்திருந்தால் வீக்கம் எதுவும் ஏற்படாமல் காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கட்டையால் தாக்கப்பட்டிருந்தால் சிராய்ப்பு காயமோ, கன்றிய காயமோ, வீக்கமோ ஏற்பட்டிருக்கும் என்றால் ஆமாம்.

7) விபத்து பதிவேட்டில் இடது கை விரலில் நான் சொல்லியது போல் கொடுங்காயம் ஏற்பட்டது சம்மந்தமாக வேறு ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எதுவும் குறிப்பிடவில்லை. மருத்துவமனைக்கு வந்த பிறகு கூட எலும்பு முறிவு ஏற்படுத்திக் கொண்டார் என்றால் அவ்வாறு இல்லை. எத்தனை நாட்கள் கழித்து நுண்கதிர் பரிசோதனை செய்யப்பட்டது என்றால் சிகிச்சை பதிவேட்டை பார்த்து தான் சொல்ல முடியும்.

8) ஒரு நபர் கீழே விழுந்து கையை ஊன்றினால் நான் மேற்சொன்னவாறு காயம் போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. ஏதேனும் கடினமான பொருள் மீதோ, சுவற்றின் மீதோ மோதுவதால் மேற்படி காயம் போல் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. காயச் சான்றிதழில் அவ்வாறு நுன்கதிர் படம் எடுத்து பரிசோதனை செய்திருந்தால் அதனை குறித்து வைத்திருப்பேன் என்றும் அவ்வாறு செய்யாததால் தான் குறிப்பு இல்லை என்றால் சரியல்ல.

9) நுண்கதிர் படம் எடுத்த துறை சம்மந்தமான அதிகாரியை பற்றி விவரம் அதில் இல்லை என்றால் ஆமாம். நான் எலும்பு முறிவு சிகிச்சை நிபுனர் கருத்துரை வழங்கியதாக சொல்லியுள்ளேன். ஆனால் அவர் பெயர் விவரம் சொல்லவில்லை. எலும்பு முறிவு சிகிச்சை நிபுனர் நுண்கதிர் படம் எடுத்து கருத்துரை வழங்கினார் என்றால் அவருடைய கருத்துரையின் அடிப்படையில் தான் நான் கருத்துரை வழங்கினேன் என்றால் ஆமாம். எந்த தேதியில் எலும்பு முறிவு சிகிச்சை நிபுனர் சிகிச்சை அளித்தார் மற்றும் அதன் விவரம் காயச் சான்றிதழில் காணப்படவில்லை என்றால் அவ்வாறு இல்லை.

10) எலும்பு நகர்வு சரியாக எத்தனை நாட்கள் ஆகும் என்றால் எலும்பு முறிவு நிபுனரிடம் தான் கேட்க வேண்டும். என்னுடைய காயச் சான்றிதழில் காயம் பட்ட நபர் இந்த தேதியில் சிகிச்சைக்கு சேர்ந்து விடுவிக்கப்பட்டார் என்ற விவரத்தை விபத்து பதிவேடு, காயச் சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து பரிசோதனை குறித்து காயச் சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் உள்நோயாளி பதிவேட்டில் உள்ளது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.